World Christian Fellowship
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# ரோமருக்கு எழுதியக் கடிதம்

**ஆசிரியர்** : அப்போஸ்தலனாகிய பவுல், முன்பு தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்று அழைக்கப்பட்டவர். அவனருடைய பெற்றோர் யூத குலத்தை சார்ந்தவர்கள். ரோம குடிமக்கள் கிரேக்க மொழியும் எபிரேய மொழியும் நன்கு பேச கூடியவர்கள். அவர் நவீன துருக்கி தர்சுவிலும் மற்றும் எருசலேமில் கமாலியேல் என்பவர் கீழ் இறையியல் கற்றவர்.

**வருடம்** : கி.பி 57 கொரிந்து சபை .

பவுல் தெர்தியு (Tertius) என்பவனுக்கு இந்த கடிதத்தை உரைக்கிறார். (ரோமர் 16:22)

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய நீண்ட கடிதங்களில் ஒன்றாகிய இதில், துல்லியமாக 7111 வார்த்தைகள், 433 வசனங்கள் 16 அத்தியாயங்கள் உள்ளன.

திருத்தங்கள் இல்லை

கண்டித்தல் இல்லை

நெருக்கடியோ சர்ச்சைகளோ இல்லை.

## <u>வரலாற்றுப் பின்னணி</u> :

பவுல் இந்த சபையை நிறுவவுமில்லை சென்று சந்தித்ததுமில்லை. இந்த சபை பெந்தேகோஸ்தே நாட்களில் இருந்தவர்களால் நிறுவப்பட்டிருக்கலாம். (அப்போஸ்தலர் 2: 9-11 and 2:41) தயவுசெய்து குறித்து கொள்ள வேண்டும், அங்கே யூதர்கள் மாத்திரமல்ல யூதர் அல்லாதவர்களும் ரோமாபுரியிலிருந்து வந்திருந்தனர்.

ஆரம்பத்திலிருந்தே இந்த சபையில் ஒரு சிறு கூட்டத்தாராகிய யூதர்களும் யூதர் அல்லாதவர்களும் இருந்தனர். கி.பி 49 ல், யூதர்களுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்று கொண்ட யூதர்களுக்கும் சர்ச்சை ஏற்பட்டது. ரோம அரசின் இராயனாக இருந்த கிலவுதியு (Claudius) என்பவன் யூத ஜனங்கள் எல்லோரையும் கிட்டத்தட்ட 40,000 பேரை ரோமாபுரியிலிருந்து வெளியேரும்படி கட்டளையிட்டான்.

**அப்போஸ்தலர் 18: 1-2,** [1]அதன்பின்பு பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு, கொரிந்து பட்டணத்துக்கு வந்து; [2]யூதரெல்லாரும் ரோமாபுரியை விட்டுப்போகும்படி கிலவுதியுராயன் கட்டளையிட்டபடியினாலே, இத்தாலியாவிலிருந்து புதிதாய் வந்திருந்த பொந்துதேசத்தானாகிய ஆக்கில்லா என்னும் நாமமுள்ள ஒரு யூதனையும் அவன் மனைவியாகிய பிரிஸ்கில்லாவையும் அங்கே கண்டு, அவர்களிடத்திற்குப்போனான்.

ரோமாபுரியிலிருந்து எல்லா யூதர்களையும் கட்டாயத்தினால் வெளியேற்றியபோது யூதர் அல்லாதவர்கள் ஆலயத்தை கைப்பற்றிக் கொண்டார்கள்.

கி.பி 54 ல், கிலவுதியு மரணத்திற்கு பின்பு நீரோ (Nero) என்பவன் ரோமாபுரியின் அரசனாக வந்தான். அவன் வந்து தன்னுடைய இராஜ்யம் வளமாக இருப்பதற்கு யுத ஜனங்களை திரும்ப வரகேட்டுக்கொண்டான்.

யூதர்கள் திரும்பவும் ரோமாபுரிக்குள்ளே வந்தபோது மேலும் ஒரு சர்ச்சையை கொண்டுவந்தார்கள். தற்போதைய சபையின் மூப்பர்களாக இருக்கும் யூதர் அல்லாத புறஜாதியார் யூதர்களை சபையின் அங்கத்தினராக சேர்ப்பதற்கு மிகவும் கடினமாக எதிர்த்தார்கள். தலைவர்களாக இருந்த யூதர் அல்லாத கிறிஸ்தவர்களுக்கும், யூத கிறிஸ்தவர்களுக்கும் தெளிவான வித்தியாசம் உண்டு.

தேவன் தாம் தெரிந்துகொண்ட ஜனமாகிய யூதர்களை தள்ளிவிட்டார் என்று நினைத்து புறஜாதியாராகிய கிறிஸ்தவர்கள் யூத சகோதரர்களோடு சேர விருப்பமில்லாதவர்களாய் இருந்தார்கள்.

கொரிந்துவிலிருந்து இக்காரியங்களை கேள்விப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களை சந்திக்க மனதிருந்தும் தன்னுடைய நேரத்தை செலவழிக்க மனமில்லாதிருந்தார். ரோமர் 15: 22-29.

மற்றும் ரோமர் 1:11-13 ல், பவுல் அவர்களை நேரில் காண வாஞ்சையாய் இருக்கிறேன் என்றும் தான் அடைந்த பலனை அவர்களுக்கும் அளிக்கும்படியாக வருகிறேன் என்றும் குறிப்பிட்டு சொல்லியிருகிறார். மேலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட யூதவம்சத்தார்களும் புறஜாதியாரான கிறிஸ்தவர்களும் ஒரே சபையாக இருக்கவேண்டிய முக்கியத்துவத்தை பவுல் இக்கடிதத்தில் வலியுறுத்தியுமிருக்கிறார்.

அதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் இக்கடிதத்தை சற்று வித்தியாசமாக எழுதியிருக்கிறார். அதில் அவர் முதல் அதிகாரத்தில் வாழ்த்து சொல்லவும் மற்றும் கடைசி அதிகாரம் 16 முழுவதுமாக எல்லா மூப்பர்களுக்கும் வாழ்த்து சொல்லவும் எடுத்துக்கொண்டார். அதனால் அவருக்கு எல்லோரையும் தெரியும் என்பதை காண்பிக்கும்பொருட்டு இந்த அதிகாரத்திலே 24 பெயர்களை குறிப்பிட்டிருக்கிறார். இதனால் அவர்கள் அவருடைய புத்திமதிகளை புரிந்து கொள்வார்கள் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார்.

அதிகாரம் 9 – 11 களில் அப்போஸ்தலனாகிய பவுல் அதிலுள்ள கருப்பொருளை தூண்டும் விதமாக முதல் 8 அதிகாரத்தின் இறையியல் வாயிலாக புள்ளிவிவரமாய் கான்பித்துக்கொடுக்கிறார்.

ரோமர் மூன்று முக்கிய பாகங்களாக பிரிக்கப்படுகிறது

1. சுவிசேஷத்தின் படைப்பு (அதிகாரம் 1-8),

2. தேவனுடைய திட்டத்தின்படி இஸ்ரவேல் (அதிகாரம் -11)

3. கிறிஸ்தவ வாழ்வுக்கான அறிவுரை (அதிகாரம் 12-15).

கீழே கொடுக்கப்பட்டுள்ள இறையியல் காரியங்கள் வேதாகமத்தில் ரோமர் புஸ்தகத்திலே இல்லை:

- தேவனுடைய இராஜ்யம் (ஒரு வசனத்தை தவிர )
- இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
- இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை
- சபை
- திருவிருந்து / இராப்போஜனம்
- பரலோகம் மற்றும் நரகம்
- மறுரூபம்
- ஆண்டவர் பிதாவாக இருக்கிறார்
- மனந்திரும்புதல்

ஒன்றை நான் தெளிவாக சொல்ல விரும்புகிறேன், இந்த புத்தகத்தில் அநேக தவறான போதகங்கள் வெளிக் கொணரப்பட்டிருகிறது. ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பவுல் மற்ற இடங்களிலுள்ள சபைகளில் போதித்தது முழுமையான சுவிசேஷம் அல்ல என்பதை மக்கள் சரியாக புரிந்துகொள்ளமாட்டார்கள். மனந்திரும்புதல் என்ற முக்கியமான கருத்து இந்த புத்தகத்தில் விடப்பட்டிருகிறது.

மற்ற சபைகளில் அப்போஸ்தலனாகிய பவுல் போதித்த சில சுருக்கமான விஷயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**அப்போஸ்தலர் 17:30**, அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்-போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.

**அப்போஸ்தலர் 20:21**, தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக்குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக்குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.

**அப்போஸ்தலர் 26:20**, முன்பு தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்கு-முள்ளவர்களிடத்திலும், பின்பு புறஜாதியாரிடத்திலும் நான் போய், அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பி குணப்படவும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளை செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன்.

ரோமாபுரிக்கு கடிதம் எழுதும் போது பவுல் கீழ்கண்ட வார்த்தைகளை அதிகமாக உபயோகித்திருக்கிறார்.

- தேவன் 153 முறை
- கிறிஸ்து 65 முறை
- ஆண்டவர் 43 முறை
- நியாயப்பிரமாணம் 72 முறை
- பாவம் 48 முறை

- விசுவாசம் 40 முறை

இந்த கடிதத்தில் நீதி முக்கிய கருத்தாயிருக்கிறது!

ரோமர் புத்தகத்தில் குறிபிட்டுள்ள மற்ற இறையியல் காரியங்களாவன

- நியாயந்தீர்க்கப்படுதல் (5:1)
- சுத்திகரிப்பு செய்தல் (6:1-13)
- நிவிர்த்தி செய்தல் (3:23-25)
- நீதிமானாக காண்பித்தல் (4:6-8)
- மகிமையடைதல் (8:16-23)
- பாதுகாவல் (8:35-39)
- இரந்து வேண்டுதல் (8:26-27)
- மருரூபமாகுதல் (12:1-2)

ரோமரிலிருந்து தவறான போதனைகள் :

1. நியதி
2. தேர்தல் கோட்பாடு
3. இஸ்ரவேல் தேவனால் கைவிடபட்டா ர்கள்
4. மாற்று இறையியல்
5. கூடுதலான இரக்கம்

<u>ரோமர் அதிகாரம் 1</u> இரண்டு பாலினத்து ஓரினச்சேர்க்கையைப் பற்றி பேசப்பட்டிருகிறது. ஏன்னென்று உங்களுக்கு தெரியுமா? 15 ரோம அரசர்களில் 14 பேர் ஓரினச்சேர்க்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டவர்கள்.

எல்லா மனிதர்களிடத்திலும் பாவமானது மிக பெரிய சர்ச்சயாயிருக்கிறது. புறஜாதியாருக்கும் யூதர்களுக்கும் இடையே எந்த ஒரு வித்தியாசமும் இல்லை. புறஜாதியார் பாவிகளாய் இருக்கிறார்கள் யூதர்களும் அப்படியே.

<u>அதிகாரம் **2**</u> நியாயந்தீர்க்கப்படுதலை கருத்தில்கொண்டு, பாவி நியாயந்தீர்க்கப்படுவதை குறித்து பவுல் விவரித்துச் சொல்லியிருக்கிறார். யூதர்கள் விசுவாசத்தின்படி நியாயந் தீர்க்கப்படுவார்கள், புறஜாதியாரும் அப்படியே என்று சொல்லுகிறார். யூதர்களும் புறஜாதியார்களும் தங்களை இரட்சித்துக்கொள்வதற்கும் அல்லது நியாயத்தீர்ப்பிலே தங்களை காப்பாற்றிக்கொள்வதற்கும் சுவிசேஷம் அவர்கள் எல்லாருக்கும் வேண்டியதாய் இருக்கிறது என்று விவரித்துச் சொல்லியிருக்கிறார்.

என்றாலும் யூதர்கள் இரட்சிப்பிலே அனுகூலம் காணலாம் என்று நினைகிறார்கள். யூதர்கள் பாவத்துக்கும் நியாயத்திர்ப்புக்கும் விலக்கப்பட்டவர்கள் அல்லவென்று விளக்குகிறார். எல்லோரும் ஒரே வழியில் மீட்கப்படுகிறார்கள். ஆக, மனிதர்கள் எப்படி தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்கலாக இருக்க முடியும்?

<u>அதிகாரம் **3**</u> தேவனிடத்திலிருந்து வருகிற நீதி என்பது "இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிற எல்லோருக்கும்" (3:22) தரிப்பிக்கப்படுகிற நீதி என்று பவுல் அறிவிக்கிறார். விசுவாசிகள் எல்லோரும்

நியாயப்பிரமாணத்தின்படி அல்லாமல் விசுவாசத்தினாலே நியாயந்தீர்க்கப்பட்டு காப்பாற்றப்படுகிறார்கள் (3:28).

நியாயப்பிரமாணம் தவறா? என்ற கேள்விக்கு பவுல் பதில் அளிக்கிறார். “அப்படியல்ல, நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே” (3:31). நியாயப்பிரமாணம் மக்களை சுவிசேஷத்திற்கு நேராய் நடத்திச் செல்வதற்கு வரையறுக்கப்பட்டுள்ளது மற்றும் சுவிசேஷம் நியாயப்பிரமாணத்தை அவமாக்கவில்லை. அதுபோல மேசியா தான் வரபோவதை தீர்க்கதரிசனங்களாக சொன்னதை அவமாக்கவில்லை. மாறாக அவர் அதை நிறைவேற்றினார். அதேபோல, சுவிசேஷம் நியாயபிரமாணத்தை பூர்த்திசெய்து, அவற்றை ஒரு முழுமையாக்கி, இதுவரை நியாயப்பிரமானதினாலே சுட்டிக்காண்பிக்கப் பட்டதை நிறைவேற்றியும் இருக்கிறது.

<u>அதிகாரம் **4**</u> சுவிசேஷம் என்னும் நற்செய்தி இயேசு கிறிஸ்துவினிமித்தம் தேவனுடைய நீதி ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது என்று பவுல் அறிவித்தார்.

பவுல் பிரச்சனையை விளக்குகிறார்: கர்த்தருக்கேற்றபடி நாம் இல்லாததினால் நாம் ஒவ்வொருவரும் மரணத்தை அடையவே வேண்டும்.

பவுல் தீர்வை விளக்குகிறார்: நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் நித்தய

வாழ்வை பெறுவதே தேவனுடைய ஈவாயிருகிறது. இது தேவனுடைய ஈவு, நாம் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதன் பலன் அல்ல. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பே விசுவாசத்தினிமித்தம் தேவனால் நீதிமானாக்கப்-பட்டவனாகிய ஆபிரகாமை எடுத்துக்காட்டாக கொண்டு பவுல் இதை நிறுபித்திருக்கிறார். இரட்சிப்பு என்பது தேவனுடைய கிருபையினாலும் விசுவாசத்தினாலுமேயன்றி, கிரியைகளினாலும் நியாயப்பிரமாணத்தினாலும் அல்லவே.

<u>அதிகாரம் **5**</u> நாம் பாவிகளாய் இருந்தபோதிலும் கிறிஸ்துவானவர் நம்மை இரட்சித்தார் என்றும், நாம் நியாயப்பிரமாணத்தினால் அல்ல கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம், நம்முடைய பாவங்களை காட்டிலும் அவருடைய கிருபை பெரிதாயிருக்கிறது என்று பவுல் சொல்லுகிறார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நாமெல்லோரும் சமாதானத்தை அடைந்திருக்கிறோம். ஆதாமினுடைய விழுதலே எல்லா மனுஷருக்குள்ளும் பாவத்தையும் சாவையும் கொண்டு வந்தது. ஆதாமின் பாவங்களால் ஏற்பட்ட பாடுகளைவிட இயேசு கிறிஸ்துவின் நீதியும், தேவனுடைய கிருபையும் நம்மை இரட்சிப்பதற்கு அதிக வல்லமை படைத்திருக்கிறது. அவருடைய கிருபை அளவில்லாதது – நிரம்பி வழிவது.

<u>அதிகாரம் 6</u> சுவிசேஷத்தை குறித்து புறஜாதியார்கள் ஏற்படுத்துகிற சர்ச்சைகளை பவுல் சரிசெய்கிறார்.

கிருபையை பெறுவது மிக எளிதாயிருக்குமானால் நம்முடைய வழிகளை மாற்றிக்கொள்ள முற்படுவோமா? எப்பொழுதெல்லாம் சுவிசேஷம் தெளிவாக படைக்கப்படுகிறதோ, இந்த கேள்வி எழும்பும். ஒருவேளை நம்முடைய பாவங்கள் எளிதாக மன்னிக்கப்பட்டுவிட்டால், நாம் எதற்கு பாவத்தை குறித்து கவலைப்பட வேண்டும்? தொடர்ந்து பாவத்தை செய்யலாமா?

நீங்கள் சுவிசேஷத்தை பெற்ற பின்பு உங்களுக்கு சுதந்திரம் உண்டு. ஆனால், நீங்கள் பாவத்திற்கு மரித்தீர்கள் என்பதை நீங்கள் உணரவில்லையா? ஆகையால் சுவிசேஷத்தை பாவம் செய்வதற்கு ஒரு உரிமமாக பயன்படுத்தாதீர்கள்.

<u>அதிகாரம் **7**</u> தேவனுக்கேற்றவர்களை சரியாய் இருப்பதற்கு யூதர்கள் எவ்வாறு நியாயபிரமாணத்தை தங்கள் சட்டமாக உட்படுத்திக் கொண்டார்கள் என்பதை பவுல் ஆய்வு செய்கிறார். அவர் தன்னைத்தான் ஒரு எடுத்துக்காட்டாக கொண்டு எவ்வாறு எல்லா நியாயப்பிரமாணங்களையும் முக்கியமாக கடைசி கட்டளையான பொருளாசையைக் குறித்து தன்னால் கடைப்பிடிக்க முடியவில்லை என்று சுட்டிக்காட்டினார். ஆகையால் நியாயப்பிரமாணத்தை உட்படுத்திக்கொள்ளுதல் யூதர்களை தேவனோடு சரியாய் இருப்பதற்கு விடுவதில்லை.

நியாயப்பிரமானத்திற்கும் பாவத்திற்கும் இடையிலான இணக்கங்களை பவுல் தெளிவுபடுத்துகிறார். இந்த அதிகாரத்தில் யூத விசுவாசிகளிடையே விவாகத்தின் ஒப்புமைகளை குறித்து பேசுகிறார். ஏனென்றால் அவர்கள்தான் நியாயப்பிரமாணத்திலே மிகவும் அக்கறை உள்ளவர்கள்.

<u>அதிகாரம் **8**</u> யூதரும் புறஜாதியாரும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தங்களுடைய வாழ்க்கையை சுதந்திரமாய் வாழ்வதற்கு ஆவியிலே சுதந்திரத்தை பெற்றிருக்கிறார்கள்.

அடுத்த மூன்று அதிகாராங்கள் 9 to 11ல் தேவனுடைய திட்டத்தின் கீழ் இஸ்ரவேல்

<u>அதிகாரம் **9**</u>

**கடந்த காலத்தில் இஸ்ரவேலின் நிராகரிப்பு**

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி இரக்கம்

தேவனுடைய கிருபையினால்
தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல்

இஸ்ரவேலின் தற்போதைய நிலைமை

தேவனுடைய இரக்கமும் கோபமும்

யூதர் அல்லாத ஜனங்களை தேவன்
தெரிந்துகொண்டார்

அதிகாரம் **10**

## தற்போதைய இஸ்ரவேலின் நற்செய்தி நிராகரிப்பு

கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தின் வாயிலாக தேவனுடைய நீதி.

எல்லோருக்கும் இரட்சிப்பின் நற்செய்தி

அதிகாரம் **11**

## வருங்காலத்தில் எல்லா இஸ்ரவேலர்களும் இரட்சிக்கப்பட வேண்டும்

எஞ்சியுள்ள இஸ்ரவேல்

புரஜாதியான கிளைகள் சேர்க்கப்படுவது

இஸ்ரவேலுடைய நிராகரிப்பு இறுதியல்ல

அதிகாரம் **12** இந்த புத்தகத்தில் முந்தைய அதிகாரங்களில் எதற்காக நமக்கு இரட்சகர் வேண்டும், நாம் எப்படி அவரை ஏற்று கொள்ள வேண்டும் என்பதே முக்கியமாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. எனினும், ஒரு கிறிஸ்தவன் இரட்சிக்கப்பட்ட பின்பு எப்படி வாழ வேண்டும் என்பதை இந்த அதிகாரத்தில் காணலாம்.

நீங்கள் யார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். உங்களை நீங்களே இரட்சிக்க வில்லை, கிறிஸ்துவே இரட்சித்தார். கிறிஸ்துவின் சரீரமாகிய

விசுவாசிகளுக்குள் நாம் ஒவ்வோவரும் அவராலே வைக்கப்பட்டிருக்கிறோம்.

தனி நபர்களாகிய நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவினாலே அவருடைய சரீரமாகிய விசுவாசிகளுக்குள் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறோம். அணைத்து கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாக்கப்படிருகிறோம் ஆயினும் ஒரே சரீரத்தில் சிறு உறுப்புக்களாக திருச்சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு சபையானது சரியாக நடத்தப்பட வேண்டுமானால் அதனுடைய அங்கத்தினர்கள் ஆவிக்குரிய_வரங்களினாலும், அந்த வரங்களை தேவனுடைய மகிமைகென்று முறையாக பிரயோசனப்படுத்த வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு கொடுக்கப்பட்ட கொள்கைகள் :

A) அன்பு
B) கடவுளின் குணாதிசயங்கள்
C) நிதானித்து பேசுகிற தன்மை
D) எதிரிகளை கையாளுதல்.

<u>அதிகாரம் **13**</u> தேசத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு பவுல் விளக்கம் அளிக்கிறார். பவுல் ரோம கிறிஸ்தவர்களை பார்த்து, அவனவன் தன் வரியை கட்டவேண்டும் என்று கட்டளையிடுகிறார். ஏன்னென்றால் தேவன் அதிகாரிகளை ஏற்படுத்தியிருக்கிறார். அதிகாரிகள் தங்களை

எதிர்ப்பவர்களை தண்டிக்கிறார்கள்; கீழ்படிகிறவர்களையோ புகழுகிறார்கள். தேசம் வரியை பெறுவதற்காக ஆண்டவர் அதிகாரிகளை நியமித்திருக்கிறார், அவர்கள் அதை வசூலிப்பதிலே தரித்திருக்கிறார்கள்; இதுவே ரோம கிறிஸ்தவர்கள் வரி கட்டுவதற்கான காரணம்.

<u>அதிகாரம் **14**</u> யூதர்களும் புரஜாதியாரும் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் எப்படி ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்களை பார்த்து பவுல் சொல்லுகிறார். முதலாவதாக போஜனத்தை பற்றி பேசுகிறார், யூதர்கள் சில பதார்த்தங்களை பரிசுத்தமானது அல்ல என்று சொல்லுகிறார்கள் ஆனால் புரஜாதியாருக்கோ அதைக் குறித்து எந்த ஒரு பிரச்சனையும் இல்லை.

யூதர்கள் தங்கள் ஓய்வுநாளை வரத்தின் கடைசி நாளன்று ஆசாரிக்கிரார்கள். அதேசமயம், புறஜாதியார்கள் தங்கள் ஓய்வுநாளை வரத்தின் முதல் நாளன்று ஆசாரிகிரார்கள்.

பவுல் யூதரையும் புரஜாதியாரையும் அன்பிலே ஒன்றாயிருக்க வேண்டுகிறார் .

<u>அதிகாரம் **15**</u> ஒருவருடைய பாரங்களை மற்றவர் சுமந்துகொள்ளும் போது இருவரும் ஒன்றாக செயல்பட முடியும் என்றும் ஒரே நோக்கோடு பார்ப்பதனால் தங்கள் வாழ்வில் தேவனை மகிமைப்படுத்த முடியும் என்று பவுல் இரு தரத்தாரிடமும் சொல்லுகிறார். அல்லாமல் பாடல்களினாலும் அற்புதங்களினாலும் எவ்வாறு

தன்னுடைய ஊழியத்தை நடத்தினார் என்று பவுல் உறுதிப்படுத்தினார்.

<u>அதிகாரம் **16**</u> பவுல் 24 பேருக்கு அவர்களுடைய பெயர்களை சொல்லி தனிப்பட்ட முறையில் தன்னுடைய வாழ்த்துக்களை சொல்லியிருக்கிறார்!

ரோமர் புத்தகத்தில் 85-ற்கும் மேற்பட்ட வசனங்களை பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். 57 வசனங்களில் நேரடியாகவும் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டுகிறார்.

1. ரோமர் 1:17 ஆபகூ 2:4
2. ரோமர் 1:22 எரேமி 10:14
3. ரோமர் 2:6 நீதி 24:12
4. ரோமர் 2:6 சங் 62:12
5. ரோமர் 2:11 உபா 10:17
6. ரோமர் 2:11 யோபு 34:19
7. ரோமர் 2:24 ஏசா 52:5
8. ரோமர் 2:24 எசே 36:20
9. ரோமர் 3:4 சங் 116:11
10. ரோமர் 3:4 சங் 51:4
11. ரோமர் 3:8 ஏரே 17:6
12. ரோமர் 3:10, 11, 12 சங் 14:1
13. ரோமர் 3:13 சங் 5:9
14. ரோமர் 3:13 சங் 140:3
15. ரோமர் 3:14 சங் 10:7
16. ரோமர் 3:15-18 ஏசா 59:7, 8
17. ரோமர் 3:18 சங் 36:1
18. ரோமர் 4:3 ஆதி 15:6
19. ரோமர் 4:7, 8 சங் 32:1, 2

| | |
|---|---|
| 20. ரோமர் 4:11 | ஆதி 17:10 |
| 21. ரோமர் 4:17 | ஆதி 17:5 |
| 22. ரோமர் 4:18 | ஆதி 15:5 |
| 23. ரோமர் 7:7 | யாத் 20:17 |
| 24. ரோமர் 7:7 | உபா 5:21 |
| 25. ரோமர் 8:36 | சங் 44:22 |
| 26. ரோமர் 9:7 | ஆதி 21:12 |
| 27. ரோமர் 9:9 | ஆதி 18:10 |
| 28. ரோமர் 9:12 | ஆதி 25:23 |
| 29. ரோமர் 9:13 | மல் 1:2, 3 |
| 30. ரோமர் 9:15 | யாத் 33:19 |
| 31. ரோமர் 9:17 | யாத் 9:16 |
| 32. ரோமர் 9:20 | ஏசா 45:9 |
| 33. ரோமர் 9:21 | ஏரே 18:6 |
| 34. ரோமர் 9:25 | ஓசி 2:23 |
| 35. ரோமர் 9:26 | ஓசி 1:10 |
| 36. ரோமர் 9:27, 28 | ஏசா 10:22, 23 |
| 37. ரோமர் 9:29 | ஏசா 1:9 |
| 38. ரோமர் 9:33 | ஏசா 8:14 |
| 39. ரோமர் 9:33 | ஏசா 28:16 |
| 40. ரோமர் 10:5 | லேவி 18:5 |
| 41. ரோமர் 10:5 | எசே 20:11 |
| 42. ரோமர் 10:6, 7 | உபா 30:12, 13 |
| 43. ரோமர் 10:8 | உபா 30:14 |
| 44. ரோமர் 10:11 | ஏசா 28:16 |
| 45. ரோமர் 10:13 | யோவேல் 2:32 |
| 46. ரோமர் 10:15 | ஏசா 52:7 |
| 47. ரோமர் 10:15 | நாகூ 1:15 |
| 48. ரோமர் 10:16 | ஏசா 53:1 |
| 49. ரோமர் 10:18 | சங் 19:4 |
| 50. ரோமர் 10:19 | உபா 32:21 |

| | |
|---|---|
| 51. ரோமர் 10:20, 21 | ஏசா 65:1, 2 |
| 52. ரோமர் 11:1 | சங் 94:14 |
| 53. ரோமர் 11:3 | 1இரா 19:10, 14 |
| 54. ரோமர் 11:4 | 1இரா 19:18 |
| 55. ரோமர் 11:8 | ஏசா 29:10 |
| 56. ரோமர் 11:8 | ஏசா 6:9 |
| 57. ரோமர் 11:9, 10 | சங் 69:22, 23 |
| 58. ரோமர் 11:26, 27 | ஏசா 59:20, 21 |
| 59. ரோமர் 11:34 | ஏசா 40:13 |
| 60. ரோமர் 11:35 | யோபு 41:11 |
| 61. ரோமர் 12:9 | ஆமோஸ் 5:15 |
| 62. ரோமர் 12:16 | ஏசா 5:21 |
| 63. ரோமர் 12:16 | நீதி 3:7 |
| 64. ரோமர் 12:19 | உபா 32:35 |
| 65. ரோமர் 12:20 | நீதி 25:21, 22 |
| 66. ரோமர் 13:9 | யாத் 20:13, 17 |
| 67. ரோமர் 13:9 | உபா 5:16-21 |
| 68. ரோமர் 13:9 | லேவி 19:18 |
| 69. ரோமர் 14:11 | ஏசா 45:23 |
| 70. ரோமர் 15:3 | சங் 69:9 |
| 71. ரோமர் 15:9 | சங் 18:49 |
| 72. ரோமர் 15:10 | உபா 32:43 |
| 73. ரோமர் 15:11 | சங் 117:1 |
| 74. ரோமர் 15:12 | ஏசா 11:1, 10 |
| 75. ரோமர் 15:21 | ஏசா 52:15 |